DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-23/2025

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முனியசாமி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 present. A3 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed)

12.03.2026 – 12.40 PM

முதல் விசாரணை:-

1. நான் சொக்கானை கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். உறவினர்கள். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 4 ஐ எனக்கு தெரியும்.

2. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு மாலை நேரத்தில் வடக்கு சொக்கானை விலக்கு அருகில் நான் சென்று கொண்டருந்த போது அங்கே 20 க்கும் மேற்பட்ட நபர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அதைப் பார்க்க சென்றபோது என்னை யாரோ கீழே தள்ளிவிட்டார்கள். என்னை தள்ளிவிட்டதில் எனது வலது பக்க முதுகில் மற்றும் நாடியில் ரத்தக்காயம் ஏற்பட்டது. என்னை தள்ளிவிட்டவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆகும். புகார் மனுவில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

பிறழ் சாட்சி:-

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: -**

கடந்த 12.02.2024 ம் தேதி மாலை 07.00 மணியளவில் சொக்கானை

விலக்கு அருகில் உள்ள வேப்பமரம் அருகில் சென்று கொண்டிருந்தபோது எதிரிகள் முனீஸ்வரன், ராமசாமி, பேச்சியம்மாள் ஆகியோர் என்னை பார்த்து அசிங்கமாக பேசி கம்பால் அடித்து காயப்படுத்தி ரத்தக்காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், என்னை கொலை மிரட்டல் ஏற்படுத்தினார்கள் என்றும், புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதால் எதிரிகளுடன் சமதாதானம் செய்து கொண்டு எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.12 18:42:10 +0000